☆ தனி இதழ் 1 அணா ☆ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5500

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 13௳ வியாழன் (26—1—56) ★ ★ வெளியீடு: தை 14௳ வெள்ளி (27—1—56) [இதழ் 192

மராட்டியம்—ஆந்திரம் இணைப்பு

கர்நூல், ஜன. 25—

மராட்டியத்தையும்—ஆந்திரத்தையும் ஒன்றாக இணைத்து ஒரு மாநிலம் அமைக்கலாம் என ஆந்திர மாநில முதன்மந்திரி கோபால ரெட்டியார் இங்கு கருத்தறிவித்தாராம்; பெரிய இரு மொழி மாநிலங்கள் அமைப்பதை அவர் வரவேற்கிறாராம்.

'தெலிங்கானாவையும் சேர்த்து ஆந்திர—கர்நாடக மாநிலம் ஒன்றை ஏற்படுத்தலாம்' என்று ஐதராபாத் முதன் மந்திரி கூறியிருக்கிறாராம்.

இது குறித்துக் கேட்கப்பட்டபோது, கோபால ரெட்டி

(4-ம் பக்கம் பார்க்க)

'குடியரசு தின விழாவில் கலந்துகொள்ளோம்'

கவர்னர் விருந்தும் புறக்கணிப்பு!

டில்லியின் சூதுமதிக்குக் கண்டனம்

திராவிட பார்லிமெண்டரி கட்சி முடிவு

சென்னை, ஜன. 26—

இன்று நடைபெற்ற குடியரசுத் தினவிழாவில், எல்லைகள் விஷயமாகச் சர்க்காரின் தீர்ப்பைக் கண்டிக்குமுகத்தான் சென்னை சட்டசபை திராவிட பார்லிமெண்டு கட்சியினர் கலந்து கொள்ளவில்லை.

விழாவையொட்டி, இன்று மாலை கவர்னர் அளிக்கவிருக்கும் விருந்தையும் புறக்கணிப்பது என்று நேற்று நண்பகல் தோழர் சுயம்பிரகாசம் தலைமையில் கூடிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

டில்லி ஆட்சியின் அக்கிரமத்தைக் கண்டிக்கவும், நீதி பெறத் தவறிய சென்னை அரசின் தவறுகளை இடித்துரைக்கவும் திராவிட பார்லிமெண்டு கட்சியினர் இந்த முடிவுகளைச் செய்தனர். அதனால், குடியரசு தின விழாவை ஒட்டி நடைபெறும் கொடியேற்ற விழா—இராணுவ பவனி முதலிய விழாக்களில் கலந்து கொள்ளுமாறு வந்த அழைப்பை நிராகரித்து விட்டதாகவும், மாலையில் நடைபெறவிருக்கும் கவர்னரின் விருந்தையும் புறக்கணிக்கப் போவதாகவும் நமது நிருபரிடம் திராவிட பார்லிமெண்டரி கட்சியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

மற்றும் இதர நடவடிக்கைகளை, இதர அரசியல் கட்சித் தலைவர்களைக் கலந்து பேசி முடிவுசெய்து கொள்வதெனவும் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

'பிரிட்டிஷார் பாதுகாத்த இந்தியாவின் ஒற்றுமையை பண்டித நேரு சிதைக்கிறார்'

பிரிட்டிஷ் பத்திரிகை குற்றச்சாட்டு

லண்டன், ஜன. 24—

பிரிட்டிஷ் வலதுசாரி கன்சர்வேடிவ் தீவிர இதழான 'டெய்லி எக்ஸ்பிரஸ்' இந்தியப் பிரதமர் நேருவைக் கடுமையாகத் தாக்கி எழுதியிருப்பதாகத் தெரியவருகிறது.

'இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குப் பண்டித நேருதான காரணம்' என்றும், 'பிரிட்டிஷ் ஆட்சியின் எல்லாச் சின்னங்களையும் அழிப்பதுதான் நேரு கட்சியின் கொள்கை' என்றும் இந்த இதழ் வருணித்துள்ளதாம்.

'பிரிட்டிஷ் சர்க்கார்தான் இந்தியாவின் 'ஒற்றுமை' குலையாமல் பாதுகாத்து வந்தது; பிரிட்டிஷாரின இந்தச் சாதனையை நேரு தகர்த்தெறிந்து வருகிறார்' என்றும், 'பிரிட்டிஷாரை விரட்டியதுடன் தொல்லைகள் தீர்ந்துவிட்டதாக நேரு நினைத்தார்; ஆனால், இப்போதுதான் தொல்லைகள் துவங்கியிருக்கின்றன என்பதை நேரு உணரவேண்டும்' என்றும் அந்த இதழ் எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

தேஷ்முக் அலுவல்களை கவனித்தாராம்!

புதுடில்லி, ஜன. 25—

இந்திய சர்க்கார் நிதியமைச்சர் சி. டி. தேஷ்முக், வழக்கம்போல இன்று தம அலுவல்களைக் கவனித்ததாகக் கூறப்படுகிறது.

மாலையில் நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டங்களிலும் அவர் கலந்துகொண்டாராம்.

தேஷ்முக், தமது விலகல் கடிதத்தைத் திரும்பப் பெற்றாரா இல்லையா என்பது இன்னும் தெரியவில்லை என்றும், ஆனால், அவரது விலகல் கடிதம் இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் தெரிய வருவதாயும் செய்திகள் கூறுகின்றன.

இம்மாதம் 29-ந் தேதி நடக்கும் மராட்டியப் பிரதேசக் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்திற்குப் பின்புதான் அவர் இறுதி முடிவு மேற்கொள்ளுவார் என்று தெரிய வருகிறது.

சென்னைக் கவர்னர் முன்னிலையில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

குடியரசு தினக் கொண்டாட்டத்தின்போது சம்பவம்

சென்னை, ஜன 26—

'இந்தியா, குடியரசாக மலர்ந்து மணம் பரப்ப முற்பட்ட நாள்' என்று ஆளவந்தார்களால் கொண்டாடப்படும் இன்று காலை 9 மணி அளவில் கவர்னர் பெருமான் சென்னை தீவுத் மைதானத்தில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ள வந்தபோது, தமிழரசுக் கழகத் தொண்டர்கள் சுமார் 50 பேர் கூடிக் கருப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

கவர்னர் முன்பாகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் முடிவுற்றதும், அவர்கள், கறுப்புக்கொடி—தமிழரசுக் கழகக் கொடிகளுடன் மவுண்ட் ரோடிலிருந்து திருவல்லிக்கேணி நோக்கி டெல்லி சர்க்காருக்கு எதிரான குரல் எழுப்பிக்கொண்டு சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தையும், ஊர்வலத்தையும் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பார்வையிட்டார்.

'குடியரசு தினம் என்று ஆட்சியாளரால் கொண்டாடப்படும் இந்த நாளைத் துக்க நாளாகக் கொண்டாடவேண்டும்' என்று கேட்டு, நகரின் சில பகுதிகளில் கையால் எழுதப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

தமிழரசுக் கழகத்தினர் ஏற்கனவே அறிவித்திருந்தபடி, கவர்னர் முன் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவதின் மூலம் துக்கநாளாகக் கொண்டாடுவதென அறிவித்திருக்கின்றனர்.

'தேவிகுளம், பீர்மேடு தமிழருக்கே', 'டில்லி சர்க்காரின் அநீதி ஒழிக', 'தட்சிணப் பிரதேச யோசனை ஒழிக'—என்பன போன்றவையே ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களின் ஒலி முழக்கங்களாயிருந்தன. (ந.நி.)

சென்னை சட்டசபை முன் மறியல்

25 தமிழரசுக் கழகத்தினர் கைதாகி விடுதலை

சென்னை, ஜன. 25—

சென்னை சட்டசபை முன்பு இன்று காலை மறியல் செய்த தமிழரசுக் கழகத் தொண்டர்கள் 25 பேர்கள் கைது செய்யப்பட்டு, பின் எச்சரிக்கை செய்து விடுதலை செய்யப்பட்டனர் என்று தெரியவருகிறது.

தொண்டர்கள், சட்டசபை கூடும் முன்பாக வாசலில்கூடி, 'மந்திரிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் இராஜிநாமாச் செய்ய வேண்டும்' என்றும் குரல் எழுப்பினர்.

மேலும், பார்வையாளர் கூடத்திலும் சிலர் கூடி கறுப்புக் கொடிகளைக் காட்டி ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

சட்டசபை வாசலில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்த ஏற்பாடுகளையும் மீறி கட்டடத்திற்குள் நுழைந்து கறுப்புக்கொடிகளுடன் குரல் எழுப்பியிருக்கின்றனர்.

'மந்திரிகளே பதவியிலிருந்து விலகுங்கள்; உறுப்பினர்களே, பதவியிலிருந்து விலகுங்கள்' என்று முழங்கியிருக்கின்றனர்.

பார்வையாளர் 'காலரி'யில் கூடியிருந்தவர்களில் சிலர் இதேபோல குரல் எழுப்பியதும் அவர்களை வெளியேற்றுமாறு சபைத் தலைவர் உத்தரவு பிறப்பித்தாராம். அதன்படி, பார்வையாளர் பகுதியில் எவருமே இல்லாத நிலையில் சட்டசபை நடந்திருக்கிறது.

இந்த மறியலில் கலந்துகொண்ட 25 பேர்களில் இரு பெண்களும் இருந்திருக்கின்றனர்.

கல்கத்தா—சென்னை இரயில் பாதை

ஒரிசா ஆர்ப்பாட்டக்காரரால் சிதைவு

சாமான் இரயில் வண்டி தடம் புரண்டது

கட்டாக், ஜன 25—

கல்கத்தா — சென்னை நேர் இரயில் பாதையில் கலுப்பாராகாட் அருகில் ஒரு சாமான் இரயில் தடம் புரண்டதாகத் தெரியவருகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள், இரயில் பாதை சரிபார்க்கும் தொழிலாளர்களை மரத்தில் கட்டிப்போட்டு விட்டு, 'பிஷ் பிளேட்'களை அகற்றி, பாதைகளைப் பெயர்த்தார்களாம். இதனாலேயே விபத்து ஏற்பட்டது என்றும், இதனால் ஏற்பட்ட உயிர்ச்சேத விவரம் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

இதன் காரணமாகச் சென்னையிலிருந்து புறப்பட்ட கல்கத்தா மெயில் வண்டியும், ஹௌராவிலிருந்து புறப்பட்ட சென்னை மெயில் வண்டியும், ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டு வேறு வழியாகத் திருப்பிவிடப்படுகின்றன என்று தெரியவருகிறது.

மேலும், கல்கத்தாவிற்கும்—கட்டாக் நகருக்குமிடையில் டெலிபோன், தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டுவிட்டதால், டெலிபோன், தந்தித் தொடர்புகள் அற்றுப் போய்விட்டதாகவும் தெரியவருகிறது. நிலைமைகள் சீர்செய்யப்பட இரண்டொரு நாட்களாகும் என்றும் தெரியவருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டங்களுக்கு ரூ 30 கோடி செலவு செய்யப்படும்.

மதுரையில் தொடர்ந்து ஆர்ப்பாட்டம்

45 பேர் கைது செய்யப்பட்டனர்

மதுரை, ஜன. 25—

இன்று நகரின் ஒரு தபால் அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த தமிழரசுக் கழகத் தொண்டர்கள் ஏழு பேரை போலீசார் கைது செய்திருக்கின்றனர் என்றும், இதுவரை கடந்த 5 நாட்களில் மொத்தம் 45 பேர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

மதுரை நகரசபையில், தேவிகுளம், பீர்மேடு சிக்கலில் இந்தியப் பேரரசின் முடிவை எதிர்த்து சில உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டுவந்தனர் என்றும், ஆனால் அதனை ஏற்க தலைவர் மறுத்துவிட்டதாகவும், அதனால் ஒன்பது பேர்கள் சபையிலிருந்து வெளியேறினர் என்றும் தெரியவருகிறது.

மேலும் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் இரயிலை நிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்ததாக 5 பேர்களை போலீசார் கைது செய்தனர் என்றும் தெரியவருகிறது.

கல்கத்தா இரயில்கள் ரத்து

நடைபெற்ற விபத்துக்கு காரணம்

கல்கத்தா, ஜன. 25—

ஒரிசா அருகில் இரயில் பாதைகள் சீர்குலைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதால், ஒரிசா வழியாகச் செல்லும் எல்லா இரயில்களுக்கும் முன்பாக 'பைலட்' வண்டிகள் செல்லும் என்று இங்கு அதிகார பூர்வமாகத் தெரிய வருகிறது.

மேலும் இன்று கல்கத்தாவிலிருந்து புறப்படவேண்டிய மெயில், பெஜவாடா எக்ஸ்பிரஸ், கல்கத்தா—பூரி எக்ஸ்பிரஸ் ஆகியவை ரத்துசெய்யப்பட்டிருக்கின்றன.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 26—1—'56 வியாழன்

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்

கடந்த கிழமையில் இந்தியக் குடியரசுத் தலைவர் பிறப்பித்த அவசரச் சட்டம் ஒன்றின் மூலம், இந்தியாவில் உள்ள ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தொழில் தேசியமயமாக்கப்பட்டுள்ளது.

ஆலை அரசர்கள், வர்த்தகக் கோமான்கள், பணக்காரச் சீமான்கள் முதலியோர் பங்குதாரர்களாகவும், நிர்வாகிகளாகவும் இருந்துகொண்டு நடத்தும் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ், சர்க்கார் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படுவது, சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சியின் 'மாதிரி சோஷலிச சமுதாய அமைப்பு' என்ற இலட்சியத்தை அடைவதில் மற்ேறார் முன்னேற்றப் படியாகும் என்று டில்லி நிதி அமைச்சர் இது குறித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார், வானொலி மூலம்.

குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டப்படி, இந்திய நிறுவனங்கள் 149, வெளிநாட்டு நிறுவனங்கள் 16 ஆகியவை உடனடியாக இந்திய சர்க்கார் நிர்வாகத்தின்கீழ் வரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கையின்மூலம் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களிடமுள்ள சுமார் ரூ. 380 கோடியும் இந்தியப் பேரரசின் ஆதிக்கத்தின்கீழ் வரும்.

ஆயுள் இன்ஷ்யூரன்சை, சர்க்கார், தங்கள் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவருவது, பொதுவாக முற்போக்காளர்தம் பாராட்டுதலுக்கு உரியதுதான் என்றாலும், இந்த நடவடிக்கையை மேற்கொண்டதுபற்றி விளக்குகையில் நிதி அமைச்சர் தேஷ்முக் அவர்கள், தனியார் துறை பற்றிக் குறிப்பிட்டு, அத்துறையினருக்கு உறுதிமொழிகள் வழங்க முன்வந்திருப்பதை, அதிருப்தியுடன்தான் நோக்க வேண்டியவர்களாயிருப்பர்.

இந்திய சர்க்காரே இத்தொழிலை நடத்துவதினால் மட்டும் தென்னாட்டிற்குப் பயன் ஒன்றும் கிடைத்துவிடப்போவதில்லை. ஏற்கனவே வடநாட்டுப் பண முதலைகளிடமிருந்த இந்தத் தொழிலை, அவர்களது மெய்க்காப்பாளர்களானடில்லி ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொண்டிருக்கின்றனர்; அவ்வளவுதான்.

இந்த இரு கொள்ளையர்களில் எவரிடத்தில் இந்தத் தொழில் இருப்பினும், தென்னாட்டு மக்களின் பணம் டில்லிக்குத்தான் போய்ச் சேருகிறது. இந்திய சர்க்கார் அறிவித்திருக்கிறபடி, இதனின்றும் கிடைக்கும் தொகை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்குத்தான் உபயோகப்படவிருக்கிறது.

'இரண்டாம் திட்டத்தில் தான், தென்னாட்டிற்கு உருவாக ஏதுமில்லை என்றாகிவிட்டதே! இந்த நடவடிக்கையினால் நமக்கு என்ன பலன்?' என்று தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரத்தினர் சிலர் கருதுவது வியப்புக்குரியதல்ல.

பெரும் முதலாளிகளும், பணக்காரரும், பிற்போக்காளரும் இந்தியப் பேரரசின் இந்த நடவடிக்கையைக் குறைகூறிக் கண்டித்திருக்கின்றனர்.

'அவசரமான நடவடிக்கை', 'முறை தவறியது', 'தேவையற்றது', 'நஷ்டப்படப்போகிறார்கள்'—என்றெல்லாம் கண்டித்தும், ஏசியும், குறை கூறியும், சபித்துமிருக்கின்றனர் அந்தப் 'பெருமக்கள்'.

இதுவரையில் சர்க்கார் மேற்கொண்ட தொழில்களில் நிலவும் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டி இன்ஷ்யூரன்ஸ் தேசியமயமானது தவறானது என வாதிடக் கிளம்புகின்றனர். இது அசல் 'பத்தாம் பசலி' வாதமாகும்.

சர்க்கார் மேற்கொண்ட விமானப் போக்குவரத்து போன்ற துறைகளில் பெரும் ஊழல்களும், சீர்கேடுகளும், நஷ்டமும் நிகழ்ந்திருப்பது உண்மைதான். அது சர்க்காருடைய நிர்வாகத் திறமைக் குறைவிற்கு — போதுமான அனுபவமின்மைக்கு — முற்போக்காளர்கள் கூறிடும் யோசனைகளை ஏற்க மறுத்ததின் விளைவுகளுக்கு நல்ல உதாரணங்கள். அவ்வளவே ஒழிய, ஒரு தொழில் தேசியமயமாவதே தவறு என்று கூறுவது, இருபதாம் நூற்றாண்டில் சற்றுத் துணிவான செயல்தான்.

சர்க்கார், தங்கள் மீது சுமத்தப்படும் நியாயமான குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்து, இது போன்ற தேசியமயமாக்கியத் தொழில்களைத் திறமையுடன் நடத்துவதற்கான வழிகளை உணர்ந்துகொண்டு, அவ்வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டுவதும் அவசியம்.

பெரும் மோசடிகளைச் செய்வதற்கு டால்மியா போன்ற முதலாளிகளுக்கு வாய்ப்பிருந்த இந்தத் தொழில், தேசியமயமான பின்னும் ஊழல்களுக்கு இரையானால், தேசியமயமாக்கும் கொள்கைக்கே இழிவைத் தேடித் தரும் பழியை இந்தியப் பேரரசினர் சுமக்க வேண்டிவரும்; இதனைச் சர்க்கார் உணரவேண்டும்.

மக்கள் சபைமுன் திட்டத்தைச் சொல்லி இதற்கான சட்டத்தை நிறைவேற்றாது, குடியரசுத் தலைவரின் அதிகாரத் துணைகொண்டு அவசரச் சட்டத்தின் மூலம், இன்ஷ்யூரன்ஸ் தேசிய மயமாக்கப்பட்டிருப்பது, மக்களாட்சி முறைக்கு ஊறு தேடுவதாகும் என்று சிலர்—பாதிக்கப்பட்டவர்கள்தான்— பேசியிருப்பது, வேடிக்கையாகத்தான் இருக்கிறது!

ஹாங்காங், ஜன. 24—

'அடுத்து கூடவிருக்கும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாடு அநேகமாகக் கெய்ரோவில் நடைபெறும்' என்று, சீனப் பிரதமர் சௌ—என்—லாய் நம்பிக்கை தெரிவித்ததாக எகிப்தியப் பத்திரிகையாளர் தூதக் குழுத் தலைவரான அப்துல் மொனீம் எல் சாவி, காண்டனிலிருந்து திரும்பியதும் தெரிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

துருவங்களின் நிலை நடுக்கம்

உலகம் தடுமாறுகிறது

மாமலையும் மாநிலமும் புதைகின்றன

லண்டன், ஜன. 25—

கோடானுகோடி மக்கள் வாழும் இந்த உலகம் தடுமாறுகிறது.

வட—தென் துருவங்கள் இடம் பெயர்வது போன்ற நிலை நடுக்கம் ஏற்பட்டிருக்கிறது.

கிரீன்லாந்தில் பனி உருகி வருகிறது.

மாமலைகளும், மாநிலப் பரப்புகளும் பூமிக்குள் புதையுண்டு வருவதுதான் இந்த நிலை மாற்றத்திற்குக் காரணம்.

ஒருநாளின் கால அளவு நீண்டுகொண்டே செல்கிறது. ஒரு விநாடியில் ஆயிரத்தில் ஒரு பங்கு அளவுதான், ஓராண்டில் நீள்கிறது; இருந்தாலும், உலகத்திற்கு ஏதோ ஆபத்து இருக்கத்தான் செய்கிறது

வட — தென் துருவங்களை இணைக்கும் அச்சைச் சுற்றித்தான் உலகம் சுழல்கிறது இந்த அச்சு நிலை தடுமாறினால் உருண்டையான பூமி பாதிக்கப்படத்தான் செய்யும்.

நல்லவேளையாக உலகம் ஒரு முழுக்கோளமாக இராமல் நடுவில் பிளந்திருப்பதால் நிலைமை சமாளிக்கப்பட்டு வருகிறது

இப்படிக் கூறப்படும் தகவல்கள் குறித்து பிரிட்டிஷ் வானிலை ஆராய்ச்சி நிபுணர்கள் மிகவும் கவலைப்படுவதாக வானிலை ஆராய்ச்சி நிபுணரான தாமஸ் கால கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது

மாணவர்கள் அல்ல— நண்பர்கள்!

அலகாபாத், ஜன. 23—

"'வெளிநாட்டு மாணவர்கள்' என்று அழைப்பதை நான் விரும்பவில்லை; இந்தச் சொற்றொடரை நாம் உபயோகிப்பதால் அந்த மாணவர்களுக்கும் இந்திய மாணவர்களுக்குமிடையே நாம் ஒரு வேற்றுமையை உருவாக்குகிறோம் என்பதாகும்; எனவே, 'வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள நண்பர்கள்' என்றே நாம் அவர்களை அழைக்க வேண்டும்,"

என்று, இந்திய சர்க்காரின் கல்வி ஆலோசகரான பேராசிரியர் உமாயூன் கபீர் அலகாபாத் பல்கலைக் கழகத்தின் வெளிநாட்டு மாணவர் நலக் குழுவினர் நடத்தும் ஆராய்ச்சி அரங்கு ஒன்றைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

போலந்து — பாகிஸ்தான் வர்த்தக உறவு

போலந்து—பாகிஸ்தான் நாடுகளிடையே வர்த்தக உறவை உண்டுபண்ணிக் கொள்வதற்காக போலந்து வெளிநாட்டு வர்த்தக இலாகா தலைவரான டாக்டர் லட்விக் டாட்ரஜன்ஸ்கி என்பார் தலைமையில் தூதுக் குழு ஒன்று இங்கு வந்துள்ளது. பாகிஸ்தான் தலைவர்களைத் தூதுக் குழுவினர் சந்தித்து, வர்த்தக ஒப்பந்தத்திற்காகப் பேச்சு வார்த்தைகள் நடத்துவர் என்று தெரிய வருகிறது.

ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய பிரச்சார நாடகங்கள்

ஆயிரம் ரூபாய் தருகிறது சர்க்கார்

முசாபர்பூர் ஜன 23—

நாடகாசிரியர்களுக்கு 'யோகம்' அடிக்கிறதா?

ஐந்தாண்டுத் திட்டம்பற்றி நாடகங்கள் எழுதித் தருமாறு இந்தியப் பேரரசு கேட்டிருக்கிறதாம்!

பதின்மூன்று வட்டார மொழிகளிலும் நாடகங்கள் எழுதித் தருமாறு கேட்கப்பட்டிருக்கிறதாம்!

'நடிக்கத் தகுந்தது' என்று தேர்ந்தெடுக்கப்பட்டால், ஆயிரம் ரூபாய் தந்து ஒரு நாடகத்தைப் பெற்று, அதனை நடிக்கும் உரிமையை சர்க்கார் வாங்கிக்கொள்வார்களாம்!

எளிய முறையில் குறைந்த காட்சிகள், பாத்திரங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்பதுடன், சராசரி கிராம மக்களால் புரிந்துகொள்ளக் கூடியதாக—கிராமீய மேடைகளில் நடிக்கக் கூடியதாக இருக்கவேண்டும் என்றும் இந்திய சர்க்கார் தெரிவித்திருக்கின்றனராம்.

கோடிக்கணக்கான ரூபாய் செலவில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு விளம்பரம் செய்யத் தயாரித்துள்ள திட்டத்தில் இதுவும் ஒரு பகுதி என்று தெரிய வருகிறது.

---

800 பல்கலைக்கழக மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்

பேராசிரியர் உமாயூன் அறிவிப்பு

அலகாபாத், ஜன. 25—

"உபகாரச் சம்பளம், நபருக்கு 10 ரூபாய் என்ற அளவில் இருப்பதை நான் விரும்பவில்லை; அந்தத் தொகை, மாணவர்கள் கல்விக்காகச் செலவிட வேண்டியுள்ள தொகையில் ஒரு சிறு பகுதிக்குக்கூட உதவுவதாக இராது; எனவே, மாணவர்களின் எல்லாச் செலவுகளுக்கும் போதுமான அளவு உபகாரச் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும்.

'அடுத்த ஆண்டு முதல் இம்மாதிரி சுமார் 800 பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உபகாரச் சம்பளம் வழங்குவதென இந்திய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது,"

என்று, பேராசிரியர் உமாயூன் கபீர், அலகாபாத் பல்கலைக் கழக மாணவர்களிடை பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில், 'அடுத்த ஐந்தாண்டுகளுக்குள், பல்கலை கழகக் கல்வி பெறுவோரில் 25 சதவிகிதம் பேர்கள் உபகாரச் சம்பளம பெற்று கல்வி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று நாம் நம்புவோமாக' என்று குறிப்பிட்டாராம்.

இலங்கை அரசியலில் புதிய கட்டம்

சுதந்திரத் தமிழகம் மலரும்

தமிழர் தலைவர்களின் ஐக்கிய முன்னணி

கொழும்பு, ஜன. 23—

தமிழர் பிரதிநிதிகளடங்கிய கூட்டம் ஒன்று இங்கு நடைபெற்றபோது, இலங்கை சுதந்திரம் பெற்ற நாளான பிப்ரவரி 4-ந் தேதியை இந்த ஆண்டு, தமிழர்கள், துக்க நாளாகக் கோண்டாட வேண்டும் என்று ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த யோசனையின்படி, சுதந்திர தினத்தன்று தமிழர்கள், தங்கள் இல்லங்களில் வெள்ளை அல்லது கறுப்புக் கோடி ஏற்றி வைக்க வேண்டும என்று கூறப்பட்டதாகத் தெரிகிறது.

சிங்கள மொழியுடன் சமநிலை பெற்று விளங்கும் தமிழ் மொழிக்கு சமநிலை வழங்க மறுத்து, சிங்களத்தை மட்டுமே அலுவல் மொழியாக்க நடைபெறும் முயற்சி கண்டு தமிழர்கள் கொண்டுள்ள வருத்தத்தை—கவலையைத் தெரிவிப்பதற்குத்தான் இந்த யோசனை என்றும் பேசப்பட்டிருக்கிறது.

பல கட்சிகளையும் சேர்ந்த தமிழர் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

கூட்டத்தில் எந்தவித முடிவும் மேற்கொள்ளப்படாவிட்டாலும், சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக்கப்பட்டால் எழும் சிக்கலுக்கு இரண்டு பரிகாரங்கள் கூறப்பட்டன.

'சுதந்திரத் தமிழ்நாடு அமைப்பது ஒன்று; மற்றொன்று, ஒரு பெடரல் சர்க்கார் அமைத்து, இரு பிரிவினரும் (சிங்களவர், தமிழர்) சமநிலையில் ஒன்றுபடுதல் என்பவையே அந்தப் பரிகாரங்கள்.

சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக்கப்பட்டால், இப்போதுள்ள 'யூனியன்' சர்க்கார் பயனற்றதாகப் போய்விடும் என்பதைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அத்தனை தமிழர் தலைவர்களும் ஒருமனதாக ஒப்புக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

இன்னும் சில நாட்களில், தமிழர் தலைவர்கள் எல்லாம் இந்த மொழிச் சிக்கலுக்குப் பரிகாரம் தேடுவதற்குத் தமிழர்கள் என்ற முறையில் எல்லோரும் ஒன்றுபட்ட ஒரு ஐக்கிய முன்னணி அமைப்பதில் கவனம் செலுத்துவர் என்றும் பார்வையாளர் கூறுகின்றனராம்.

தமிழர்கள் பெரும்பகுதியாக வாழ்வது வடக்கு, கிழக்கு மாநிலங்களில்தான் என்றும், அங்கு, சுமார் 15 இலட்சம் வாக்குரிமை பெற்றவர்கள் உள்ளனர் என்றும், அவர்கள் ஒன்றுபட்ட குரல் தர ஐக்கிய முன்னணி வேலை செய்யும் என்றும், அவர்களது எண்ணிக்கை இலங்கையின் மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் 20 சத விகிதம் என்றும் கூறப்படுகிறது.

சவத்திற்கு உயிரூட்டி உலவச் செய்ய மாளிகை அமைக்கிறார்கள்!

ஜலந்தர், ஜன. 23—

சவமொழிக்கு உயிரூட்டி, மீண்டும் உலவவிட 'பெரிய மனிதர்'கள் சிலரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இடைவிடாத முயற்சி எப்படி எப்படி எல்லாம் உருப் பெறுகிறது பாருங்கள்.

சவமொழிக்கு (சமஸ்கிருதம்) என ஒரு பெரும் பல்கலைக் கழகம் நிறுவப் போகிறார்களாம், வடநாட்டில்—குருக்ஷேத்திரத்தில்!

குருக்ஷேத்திரம் — மகாபாரதப் போர் நடைபெற்ற இடமாம். 'கிருஷ்ணபரமாத்மா' உலவிய புண்ணிய பூமியாம்; அந்தப் பூமியில்தான 'கோகுலபாலன்' 'கீதோபதேசம்' செய்தருளினாராம்.

அந்தப் 'புண்ணிய பூமி'யின் பெயராலேயே 'சவமொழி'ப் பல்கலைக் கழகம் அமையுமாம். இப்படிப் பல்கலைக் கழகம் அமைதால் இந்தப் 'புராதன' நகரின் பெருமை மீண்டும் ஒளிவிடத் துவங்குமாம்! அதுமட்டுமா? நகரே புது உருவம் பெறுமாம்!

(3-ம் பக்கம் பார்க்க)

திருச்சியில் மாபெரும் கண்டன ஊர்வலம்

சகல கட்சியினரும், சட்ட சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்

திருச்சி, ஜன. 24—

தேவிகுளம், பீர்மேடு கேரளத்தோடு சேரவேண்டுமென்ற பண்டித நேருவின் தீர்ப்பை எதிர்த்து சகல கட்சியினரும் அடங்கிய மாபெரும் ஊர்வலம், நேற்று மாலை 4 மணிக்கு, திருச்சி மெயின் காட் கேட்டிலிருந்து துவங்கி, நகரின் முக்கிய வீதிகளின் வழியாகக் கண்டனக் குரல் எழுப்பிக்கொண்டு சென்று மாலை 6 மணிக்கு வன்னிமரத்தை அடைந்தது.

ஊர்வலத்தில் தோழர்கள் கமு வல்லத்தரசு எம். பி., எம் பழனியாண்டி எம். எல். ஏ., பா. ரங்கசாமி எம். எல். ஏ., ப. தங்கவேலு எம் எல் ஏ., டி. பி வேதாசலம், எம். எஸ். மணி, ஏ எஸ் கிருஷ்ணமூர்த்தி, மற்றும் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, மக்கள் சோஷலிஸ்டுக் கட்சி, தமிழரசுக் கழகம் ஆகியவைகள் கலந்துகொண்டன

ஊர்வல முடிவில் நேருவினுடைய தீர்ப்பைக் கண்டித்தும், கைது செய்தவர்களை விடுதலை செய்யும்படி கோரியும் தோழர் எம். பழனியாண்டி தீர்மானங்கள் கொண்டுவந்தார். அதை ஆதரித்துத் தோழர்கள் கமு வல்லத்தரசு எம். பி, ப. ரங்கசாமி எம் எல் ஏ., ப தங்கவேலு எம். எல். ஏ, எம் எஸ் மணி, எஸ் பிரான்சிஸ் ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி, அப்பர் சாமி, ராஜகோபால்பிள்ளை ஆகியோர் பேசினர்.

* * *

கண்டனப் பொதுக்கூட்டம்

22—1—56 மாலை 6 மணிக்கு திருச்சி மலைக்கோட்டை அரசமரத்தடியில், மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் எம். எஸ். மணி தலைமை வகித்தார்.

தோழர்கள் ஏ வெ கி. சம்பத் ஆர். நாகசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

"இந்தியப் பிரதமர் நேரு அமைச்சரவையில், தேவிகுளம், பீர்மேடு மற்றும் மாநில புனரமைப்புக் குழு சிபாரிசு செய்த செங்கோட்டை ஆகியவை கேரளத்தோடு சேர வேண்டுமென்று தீர்ப்புக் கூறியதை வன்மையாகக் கண்டிக்கிறது.

"சென்னை முதன் மந்திரியும் மற்ற மந்திரிகளும், சட்டசபை பாராளுமன்றத் தமிழக உறுப்பினர்கள் அனைவரும் உடனடியாக இராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது.

"இழந்த தமிழகப் பகுதிகளை மீட்கத் திருச்சியில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும், பொதுமக்களும், தொழிலாளர்களும், மாணவர்களும் ஒன்றுபட்டுப் போராட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறது."

கூட்டத்தில் கீரனூர் தி. மு. கழகத் தோழர்களால் உண்டியல் மூலம் வசூலிக்கப்பட்ட ரூ. 39—4—6-ம், கைத்தறித் துணிகள் 37-ம் புயல் நிவாரண நிதிக்குக் கொடுக்கப்பட்டது. (ந. நி.)

★

வாணியம்பாடியில் மாணவர் ஊர்வலம்

பிரதமருக்குத் தந்தி

வாணியம்பாடி, ஜன. 24—

இன்று காலை 10 மணிக்கு வாணியம்பாடி, இஸ்லாமியக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் கல்லூரிக்குச் செல்லாமல், கல்லூரிக்கு முன் கூடி, ஊர்வலமாகப் பல முக்கிய வீதிகளின் வழியாகச் சென்றனர். பகல் 1 மணிக்கு ஊர்வலம் சந்தையிலுள்ள பூங்காவில் கூடி, தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை முதலிய தமிழ் வட்டாரங்கள் தமிழகத்தோடு இணைக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றினர்.

பிரதமர் நேருவுக்குக் கண்டனத்தைத் தெரிவித்து ஒரு தந்தியும், முதலமைச்சர் காமராசருக்கு ஒரு கடிதமும் அனுப்பப்பட்டது.

(ந. - நி)

★

புதுச்சேரி: சர்வ கட்சி கண்டனப் பொதுக்கூட்டம்

பிரமுகர்களின் கண்டன அறிக்கை

புதுவை, ஜன 23—

நேற்று மாலை 6-30 மணிக்கு புதுவை ஒதியஞ்சாலைத் திடலில், தோழர் பாரதிதாசன் தலைமையில், சர்வ கட்சிக் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் 6,000-க்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். தலைவர் கூட்டத்தின் நோக்கம் குறித்து உரை நிகழ்த்தினர். பின்னர் தோழர் குப்புசாமி அவர்கள் பேசியதும், 8 தீர்மானங்கள், பொதுமக்களின் பெருத்த ஆரவாரத்துக்கிடையே நிறைவேற்றப்பட்டன. ஒவ்வொரு தீர்மானங்களையும், ஒவ்வொரு கட்சியினரும் விளக்கிப் பேசினர்.

கம்யூனிஸ்டுக் கட்சியினர் இக் கூட்டில் இடம்பெறவில்லை.

★

புவனகிரி :

புவனகிரி, ஜன. 24—

இவ்வூரிலுள்ள பள்ளி மாணவர்கள் அனைவரும் பள்ளி செல்லாமல் ஊர்வலம் நடத்தினர். இன்று, நகர் முழுமையிலும் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. அதுதடன் படக் காட்சிகள் எவையுமே நடைபெறவுமில்லை.

மாலை, தோழர் உருத்திராபதி (பள்ளி மாணவர்) தலைமையில் நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில், தோழர்கள் இரா. சேதுராமன்) ஏ. இராமகிருஷ்ணன் (தி மு. க., அனந்தன், தட்சிணாமூர்த்தி (த. -.) விஸ்வநாதன் (கம்) ஆகியோர் நேருவின் அநீதியைக் கண்டித்துப் பேசினர். பின்னர், தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

★

கோதண்டவிளாகம்

சிதம்பரம் வட்டம் கோதண்டவிளாகம் தி. மு. கழகத் தோழர்கள், நேருவின் நேர்மையற்ற அநீதியைக் கண்டித்து 'தேவிகுளம் பீர்மேடு, செங்கோட்டைத் தாலுகாக்கள் தமிழருக்கே!' என்று ஒலி முழக்கம் செய்துகொண்டு ஊர்வலம் வந்தனர். நாங்குடி, குமாரக்குடி கிராமங்களிலுள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. நாங்குடி கிராம போர்டு எலிமெண்டரி பள்ளிக்கு மாணவர்கள் எவரும் செல்லவில்லை.

★

ஏழுமலை :

ஏழுமலை, ஜன. 21—

இவ்வூரில் இன்று, தி. மு க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளின் சார்பாகப் பூரண கடையடைப்பும், தோழர்கள் கே சுப்பையா, (தி மு. க., ஊராட்சி மன்ற உறுப்பினர்), எஸ். சின்னச்சாமி (கம்) கு. பரமசிவம் (தி. மு. க.), எம். நித்தியானந்தம் (காங்.) ஆகியவர்கள் தலைமையில் பள்ளி மாணவர்களும், பொதுமக்களும் அடங்கிய ஊர்வலமும் நடைபெற்றது. ஊர்வலத்தினர், நேருவின் அநீதியைக் கண்டித்து எதிர்ப்பு முழக்கங்கள் எழுப்பினர். பின்னர், சினிமா கொட்டகையில், தோழர் இரா. சு. தங்கராசன் (தி. மு. க) தலைமையில் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல கட்சித் தோழர்களும் சொற்பொழிவாற்றியதுடன், தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

'நியாயமும் நேர்மையும் தடம் புரண்டுவிட்டன'

மாநிலப் புனரமைப்பு குறித்து 'நவ இந்தியா' கிண்டல்

'நவ இந்தியா' 22-1-56-ந் தேதி இதழில், 'ஊர் வம்பு' எனும் பகுதியில், 'யு. ஆர்.' என்பார் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது :—

"பம்பாயில் வெறியாட்டம் கட்டுக்கு அடங்கிவிட்டது என்று அதிகாரிகள் கூறுகிறார்கள்; ஆனால், டில்லியில் இன்னும் அழுகை நின்றபாடில்லை. இந்தக் கூத்தில், பொதுத் தேர்தல் குறித்தக் காலத்தில் நடைபெறுமா என்ற கவலை வேறு அங்கு ஏற்பட்டிருக்கிறது. தேர்தலின் ஆரம்பத்தைப் பற்றி இனி கவலைப்பட வேண்டியதில்லை; அதன் முடிவைப் பற்றித்தான் கவலைப்பட வேண்டும்.

"பம்பாய் நகரம் சரித்திரப் பூர்வமாக—பிரதேச ரீதியாக மகாராஷ்டிரத்துடன் இருக்க வேண்டியது. அந்த நகரில் பெரும்பான்மையான மக்களும் மகாராஷ்டிரர்கள். இந்த உண்மையை நேருஜியும் ஒப்புக் கொள்கிறார். பின்பு அந்நகரை ஏன் மகாராஷ்டிரத்துடன் சேர்க்கவில்லை?

"கூட்ஸ் வண்டி தடம் புரண்டு விடுவதைப்போல, நியாயமும் நேர்மையும் இங்குதான் தடம் புரண்டுவிட்டது! குஜராத்திகள், பண பலத்துடன், காங்கிரஸ் மேலிடத்தில் மிகுந்த செல்வாக்கும் உடையவர்கள்; வர்த்தகம், தொழில், நிதி—இம் மூன்றிலும் ஆதிக்கம் செலுத்தும் அதிபர்கள்.

"பம்பாய் மகாராஷ்டிரத்துடன் இணைந்துவிட்டால் அங்குள்ள வர்த்தகம், தொழில் முழுவதும், கண்டவா துறைமுகத்திற்கு மாறிவிடும் என்று கூடச் சிலர் எச்சரிக்கை செய்ததாகக் கேள்வி. மாறினால் என்ன? இதற்காக நியாயமான உரிமையைக் கைகழுவிவிட முடியுமா?—என்ற சிந்தனை மட்டும் ஏனோ ஓடவில்லை!

"மகாராஷ்டிரர்களும், சீக்கியர்களும் இந்திய உபகண்டத்தின் இரு எரிமலைகள். இவர்களுக்குத் துணையாக வங்காளிகளும், ஆந்திரர்களும் இருக்கிறார்கள். நடைபாதை ஓரமாக ஊர்வலம் நடத்தி சட்டசபையில் சட்டபூர்வமான வழிகளில் 'கோரிக்கையை வற்புறுத்தும் கொள்கை' அவர்களுக்குப் புரியாது. அந்தப் போதனையும் போக்கும் தெற்கே தான் உண்டு.

"பம்பாயைப் பார்த்தபின்பு பஞ்சாப் பற்றிய முடிவுகூட இப்போது வெளிவராது என்கிறார்கள். இதற்கிடையே, 'விசால ஆந்திரமா?—அல்லது வெறும் 'ஆந்திரமா?' என்ற வேதனை வேறு!

"பஞ்சாப் பற்றிய முடிவை இப்போதே அறிவித்துவிட்டால் அமிர்தசரஸ் காங்கிரஸ் மகாசபை ஒழுங்காக நடைபெறுமா என்ற கவலையும் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே, அமிர்தசரஸ் காங்கிரசுக்குப் பின்பு பஞ்சாப் பற்றிய முடிவு வெளியானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

"'அகிம்சாமூர்த்திகள் அதற்கெல்லாம் பயந்தவர்களல்ல சார்....' என்று என் ஆபீஸ் பையன்வேறு சவால் விடுகிறான்!

"இந்த விவகாரத்தில் இந்திய சர்க்காரின் போக்குதான் புரியவில்லை; மொழிவாரிப் பிரிவினை தான் கொள்கை என்று சொன்னார்கள். 'இந்தியாவில் 300-க்கு மேற்பட்ட மொழிகள் உள்ளன. இது முடிகிற காரியமா?' என்று சிலர் கிளம்பினர்கள். பிறகு, மொழிவாரிப் பிரிவினை இராஜ்யப் புனரமைப்புக் கமிஷனாக உருவெடுத்தது. அதிலும்

(4-ம் பக்கம் பார்க்க)

உழவர் மகிழும் திருவிழா—திராவிடர் கொண்டாடும் பொங்கல் விழா

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் விளக்கம்

"உழவுத் தொழில் செய்து அதிலிருந்து உணவைச் சம்பாதித்த உழவர்களின் திருநாளாகப் பொங்கல் விழாவினை நாம் கொண்டாடுகிறோம்.

"ஏறக்குறைய 1,300 ஆண்டுகளுக்கு முன்னர் விநாயகக் கடவுள் இருந்ததாக நமக்குத் தெரியவில்லை. 7-வது நூற்றாண்டிற்குப் பின்னர்தான் 'விநாயகர் சதுர்த்தி' என்ற விழாவே துவக்கப்பட்டிருக்கிறது.

"உழைப்பின் பயனை நல்கி, நெற்கதிர் விளைவித்து, மணிகளைப் பொறுக்கி, பதர்களை விலக்கி, அரிசியாக்கிப் பொங்கலிட்டு இலையில் படைத்துச் சுற்றம் சூழ இருந்து உண்டு மகிழும் விழா பொங்கல் விழா. வேதனை குறைந்து மகிழ்ச்சி பொங்கும் மாதம் தைத் திங்களாகும். பொங்கல் விழா கொண்டாடுகையில் நாம் எப்படி, வீட்டிலுள்ள பழைய கந்தல்கள், சட்டி பானைகள் போன்றவைகளை அப்புறப்படுத்தி வீட்டை வெள்ளையடித்துச் சுத்தம் செய்கிறோமோ, அதுபோலவே, நம் உள்ளத்தேயுள்ள மூடப் பழக்கவழக்கங்களையும், பழைய கோட்பாடுகளையும், வேண்டப்படாத எண்ணங்களையும், நம்மை நாமே கெடுத்துக்கொள்கின்ற கருத்துக்களையும் அகற்றிவிட்டு, நல்ல அறிவுத் திறனும், சிந்தனை சக்தி உடையவர்களாகவும் ஆகவேண்டும்,"

—என்று, 16—1—56-ல், உசிலம்பட்டியில் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்து அவர் பேசினார் :—

"தேவிகுளம், பீர்மேட்டை மட்டும் பொருளாதாரத்துக்காக என்று திரு—கொச்சி மாநிலத்துடன் இணைப்பது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

"தமிழர்களுக்கு இந்தி மொழி தேவையற்றது. ஆட்சி மொழியாகத் தமிழும், விஞ்ஞானம், தொழில் ஆகிய துறைகளில் உலக மொழியான ஆங்கிலமுமே நமக்குத் தேவை. அஞ்சலட்டை உறைகளில் இந்தி மொழியில் அச்சடிப்பதால் என்ன பயன்? உள்நாட்டுத் தேவைக்குத் தமிழும், மற்றப் பகுதிகளுக்கு ஆங்கிலமும் அச்சடிக்கப்பட்ட உறைகளுமே போதுமானவையாகும். சின்னஞ்சிறு நாடுதான் இலங்கை. அங்கு கூட அஞ்சல் அட்டைகளில் எல்லாம் தமிழ், சிங்கள மொழிகளில்தான் அச்சடிக்கப்படுகின்றன. ஆனால், சுமார் 3 கோடித் தமிழர் வாழும் தமிழ் நாட்டில், தமிழ் மொழியில் அஞ்சலட்டைகள் அச்சடிக்கப்படுவதில்லை.

"இந்தியாவில் மொத்தம் 13 - முக்கிய மொழிகள் இருக்கின்றன. அந்தந்தப் பகுதி மக்களின் தாய் மொழியும் ஆங்கிலமும் இருந்தால் போதும். இலக்கிய வளமற்ற இந்தி மொழி தேவையற்றதுதான்.

"ஃ என்ற ஒரு எழுத்தைத் தவிர, மற்றையத் தமிழ் எழுத்துக்களெல்லாம் தொண்டைக்கு மேலே இருந்து சுவையுடன் வருகின்ற மொழி தமிழ் மொழி; ஆனால் இந்தி மொழியோ, வயிறு புடைத்து விம்மி எழுப்ப வேண்டிய மொழி. அப்படிப்பட்ட ஒரு மொழியில் சிறப்புச் சொற்களைக் கண்டுபிடிக்க மட்டும் இந்திய சர்க்கார் ரூ. 4 இலட்சம் செலவிட்டிருக்கின்றனர்."

சவத்திற்கு உயிரூட்டி...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இதற்கான திட்டத்தை பஞ்சாப் மாநில பொதுப் பணித் தேர்வுக் குழுத் தலைவரான டாக்டர் ஏ. சி. ஜோஷி என்பார் தீட்டியுள்ளாராம்.

அமையப்போகும் இந்தப் பல்கலைக் கழகம் போன்று உலகத்தில் வேறெங்கும் ஓர் பல்கலைக் கழகம் இதுவரையில் இல்லையாம். ஏனெனில், இங்கு போதனு மொழியாகவும், பரீட்சை மொழியாகவும் இந்தி மொழி இடம் பெறுமாம்.

பஞ்சாப் கவர்னரான சி வி என். சிங், உடனடியாகப் பல்கலைக் கழகம் வேலை செய்யத் துவங்கிவிட வேண்டுமெனத் துடியாய்த் துடிக்கிறாராம்.

அவரது யோசனையை சர்க்காரும் ஏற்றுக் கொண்டுவிட்டார்களாம்.

கழகத்திற்கான கட்டிடங்கள் கட்டி முடிக்க இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகுமென்றாலும், வரும் 1956 ஏப்ரல் திங்கள் முதலே கழகம் வேலை செய்யத் துவங்கிவிடுமாம்.

‘வீணை - குழல் - முழவு ஆகிய இனிய ஓசைகளை நாதசுரத்தில் எழுப்பும் இசைப்பெரும் புலவர்’

தமிழ்நாட்டின் பறிபோகா செல்வம்

இராசரத்தினத்திற்கு அண்ணு பாராட்டு

சென்னை, ஜன. 26—

தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்களது பெண் குழந்தைகள் அழகுராணி—மணிமேகலை ஆகியோருக்கு அண்ணு அவர்கள் தலைமையில் எழுத்தறிவிப்பு விழா நேற்று மாலை அவரது இல்லத்தில் நடைபெற்றபோது, நாதசுவர இசை மன்னர் திருவாவடுதுறை டி.என். இராசரத்தினம் தம் குழுவினருடன் இசை விருந்தளித்தார். அதுபோது அண்ணு அவர்கள் முடிவுரையாக ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது :—

“நண்பர்களே, நம்முடைய இசைப்பெரும் புலவர் இராசரத்தினம் அவர்கள் நமக்கு இவ்வளவு நேரமும் நல்லதொரு நாதசுர இசை விருந்து அளித்துக்கொண்டிருந்ததை நாமெல்லாம் கேட்டு இன்புற்ருேம்.

“தமிழ் நாட்டிலுள்ள பல செல்வங்கள் பறிபோய்விட்டாலும், இசைச் செல்வம் மட்டும் பறிபோகாமல் இருப்பது மட்டுமல்ல—இன்னும் நல்ல வளத்துடனும் இருந்து வருகிறது. அத்தகு இசைச் செல்வத்தை நமக்கெல்லாம் நல்ல வகையில் வழங்கும் இசைப் புலவர்கள் தமிழ் நாட்டில் பலர் இருந்தாலும் அவர்களிலெல்லாம் நம்முடைய இசைப்பெரும் புலவர் இராசரத்தினம் அவர்கள் தலைசிறந்து விளங்குபவர்.

“அவரது இசைப் புலமை பற்றித் தமிழ் நாட்டில் அறியாதார், இசையை அறியாதவர்களாகத்தான் இருக்க முடியுமே தவிர, இசையை ஓரளவேனும் உணர்ந்தவர்கள் இன்றையத்தினம் அவரது இசைப் பெருமையை நன்ருக அறிந்தவர்களாகவே இருக்கிருர்கள். பல காரியங்களைத் தக்க நேரத்தில் செய்யத் தவறிவிடும் இந்திய சர்க்காருக்கும்கூட, நமது இசைப்பெரும் புலவரின் இசைப் புலமையின் பெருமை எட்டிவிட்டதென்ருல், உண்மையிலேயே, அவரது இசைப் புலமை அனைவராலும் நல்லபடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்றுதான் பொருள்.

“அவரது இசைப் புலமை இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல — உலகில் உள்ள வேறு பல நாடுகளிலும்கூட எட்டிவிட்டது. மேல் நாடுகளில் இசைக்காக ஏற்பட்டிருக்கும் கருவிகளை அவர்கள் உபயோகப்படுத்தும் விதத்திற்கும், நமது நண்பர் இராசரத்தினம் அவர்கள் தமது இசைக் கருவியை உபயோகிக்கும் தன்மைக்கும் உள்ள மாறுபாடுகளை நன்ருக உணர்ந்திருப்பீர்களென நம்புகிறேன்.

“நாம் இங்கு கேட்ட இந்த இனிய ஓசையை — நாதத்தை மேல்நாட்டவர் கேட்கவேண்டுமானல், குறைந்தது 50 வாத்தியங்களை வைத்துக்கொண்டு, இசையையும் 50 துண்டுகளாக்கிக்கொண்டு, 50 பேர் பங்கிட்டுக்கொண்டு, ஒவ்வொருவரும் தக்க காலத்தில் ஒன்ருகச் சேர்ந்து இசை எழுப்புவார்கள்; அதைத்தான் நாம கேட்க முடியும். ஆனல் இங்கு, ஒரே இசைக் கருவியைக்கொண்டே அதனை அனுபவிக்க முடியும். மேல்நாடுகளில் இசையை அனுபவிப்பதில் அவர்களுக்குள்ள பெருமையெல்லாம், இசைக் கருவிகள் எத்தனை அளவுக்கு அதிகமாக இருக்கின்றனவோ அத்தனை அளவிற்கு இசையில் இனிமை இருக்கிறது என்று அவர்கள் கருதுகிருர்கள்.

“நமது நண்பர் இராசரத்தினம் அவர்களது நாயனத்தைத் தொலைவில் உள்ளவர்கள் கேட்க நேரிட்டால் அங்கு ஏதோ வீணை வாசிக்கப்படுகிறது என்றும, சில வேளைகளில் குழல் ஒலி எழும்புவதாகவும், இன்னுஞ் சில வேளைகளில், முழவொலி கிளம்புகிறது என்றும் சந்தேகப்படுவர். ஆனல், பக்கத்தில் வந்த பின்னர்தான், அதனைப் பார்த்ததும், இந்தச் சாதாரணமான மரக்கட்டையில் இவ்வளவு அருமையான இசை எப்படி எழும்ப முடிந்தது என்று நினைத்து ஆச்சரியப்படுவர்.

“அப்படிப்பட்ட சிறந்த தன்மையோடு, அத்தகு இனிமையை அளித்துவருவதற்கு, அவர் பல இடங்களிலும் கூறி வருவதுபோல், இசை மீது அவருக்குள்ள நீங்காப்பற்றும், அதற்காக அவர் அளித்துள்ள கடும் உழைப்பும், அவ்வுழைப்பின் பலனல் ஏற்படும் கற்பனைத் திறனும், அந்தக் கற்பனைத் திறனை உணர்ந்துள்ள தமிழ் மக்கள் அவர் மீது காட்டும் பேரன்பும்தான் அவரை இசைத்துறையில் வளப்படுத்தியதற்குக் காரணம்.

“இந்த விழாவில் கலந்துகொள்ள அவருக்கு ஏற்ற உடல்நிலை இல்லை என்று நான் கேள்விப்பட்டதும், உண்மையிலேயே நான் முதலில் வருத்தமுற்றேன். ‘அவருக்கு உண்மையிலேயே உடல் நலமில்லை என்ற காரணத்தால்தான் சென்னையிலேயே தங்கி மருத்துவரிடம் சென்று மருத்துவம் பார்த்துவந்தார்கள்,’ என்று தோழர் வேதாசலம் அவர்கள் மூலமாகக் கேள்விப்பட்டேன். அவருக்கு உடல் நிலை சரியில்லாத நேரத்தில் நான் சென்னைக்கு வந்தேன். அவரை நான் நேரிலேயே போய் பார்க்க ஆசைப்பட்டேன். ஆனல், நான் அவரைப் போய்ப் பார்ப்பதற்குள்ளாக அவரே இங்கு வந்து இந்த அருமையான இசை விருந்தளித்ததின் மூலம், அவரை நான் பாராமல் போனதற்காக அவர் எனக்குக் கொடுத்தத் தண்டனை என்ற வகையில்கூட நான் கருதலாம். ஆனுலும், பெருந்தன்மை படைத்தவர்கள் இப்படித்தான், ஒருவர் செய்ய மறந்துவிடும் காரியத்திற்கு பரிசு தருவார்கள்—தண்டனை தரமாட்டார்கள்.

“அரசியல் அல்லலில் சதாகாலமும் ஈடுபட்டுள்ள என் போன்ருர்க்கு இத்தகு இசை விருந்தை அளித்தமைக்கு அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிருேம்.

“இந்தச் சிறந்த விழாவில், இந்த இசை விருந்தினல் நான் பெருமகிழ்வு கொள்வதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. தோழர் வேதாசலம் இல்லத்தில் நடைபெறும் இந்த ஏற்பாடு உண்மையிலேயே என் வீட்டில் நடைபெறும் ஏற்பாடு போலத்தான். காஞ்சீபுரத்தில் இதுபோன்றதொரு விழாவை நடத்தும் வாய்ப்பு என் இல்லத்தில் இல்லை. என் இல்லத்திற்கு அவர் வந்திருந்து இது போன்ற இசை விருந்தினை, விழா ஒன்றில் நடத்தி உண்மையிலேயே என்னைப் பெருமைப்படுத்த வேண்டுமென விரும்புகிறேன். என்னுடைய மகன் திருமணத்திற்குத்தான் அவர் வர இருக்கிருர். சென்னையில் எனக்குள்ள வீடு என்று கருதப்படும் இந்த இல்லத்தில் இவ்விழா நடைபெறுவது, என் இல்லத்தில் நடைபெறுவதாகவே பெருமகிழ்வும், பூரிப்பும் கொள்கிறேன்.

“இவ்விழாவில் வந்திருந்து நல்ல இசை விருந்து அளித்து நம்மை களிப்பூட்டிய நண்பர்களுக்கு, இந்த விழா நினைவிலிருக்க வேண்டும் என்பதற்காகத்தான் வெள்ளிப் பரிசுகளைத் தந்தோம்; அந்தப் பரிசுகளைவிட, அவர் இசை தந்தபோது முகங்கள் மலர்ந்திருந்ததையும், அந்த முகமலர்ச்சி நம அகத்தில் ஊட்டிய களிப்பும் இவைதான் சிறந்த பரிசு என அவர்கள் நிச்சயம் எண்ணுவார்கள்.

“உண்மையிலேயே அவருக்குச் சிறந்த பரிசுகள் என்று அளிக்கவேண்டுமானல், சென்னையில் இந்திய சர்க்கார், பலருக்குப் பட்டங்கள் வழங்கினுர்கள் என்ருலும், என்னுடைய எண்ணமெல்லாம்— சென்னை கடற்கரையில் 5, 6 இலட்சம் மக்கள் கூடுகிற மன்றத்தில், அங்கு இவரது இசைப் புலமையைக் காட்டி, அம்மக்களும் இன்புற்று, பொதுமக்கள் சார்பில் இத்தகு சிறப்புச் செய்ய வேண்டும் என்பதுதான்.

“இப்படிப்பட்ட சிறப்புக்களைச் செய்ய வேண்டும் என்றுதான் நாங்கள் நெடுங்காலமாக எண்ணங்கொண்டிருக்கிருேம். அம்முறையில் முன்பு பாரதிதாசன் அவர்களுக்கு நாம் ஒரு விழா நடத்திப் பூரிப்படைந்தோம். அவருக்கு அடுத்தாற்போல் இதுமாதிரி விழா நடத்துவதானல் நண்பர் இராசரத்தினம் அவர்களுக்குத்தான் நடத்த வேண்டும் என்று எண்ணுகிருேம்.

“அத்தகைய சிறப்பு மிக்க நிகழ்ச்சிக்கு நீங்கள் உங்களது பேராதரவைத் தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

“இந்த விழாவில் இசை விருந்தளித்து மகிழ்வித்த இசைப்பெரும் புலவர் இராசரத்தினம் அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், தோழர் வேதாசலம் சார்பிலும், உங்கள் அனைவர் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.”

கலை விழா

27—1—56 மாலை 6 மணிக்கு, சென்னை-வண்ணை தியாகராயர் கல்லூரி வெளி அரங்கில், சர். தியாகராயர் கல்லூரி மாணவர்கள் நடிக்கும் ‘வீர பாண்டியன்’ — நாடகம், தோழர் சி.என். அண்ணுதுரை அவர்கள் தலைமையில நடைபெறும்.

கழகக் கூட்டம்

★

பள்ளிபாளையம்

28—1—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : அ. சண்முகம்

பேசுபவர் :

சி. பி. சிற்றரசு

நன்றி உரை

எனது செல்விகள் மணிமேகலை — அழகுராணிக்கு அறிஞர் அண்ணு அவர்களால் எழுத்தறிவிக்கப்பட்ட விழாவில், எனது அழைப்பிற்கிணங்கி பங்குகொண்டவர்கள், வாழ்த்துரை வழங்கியவர்கள், தந்தி அஞ்சல மூலம் நல்லுரை கூறியவர்கள், நாதசுர இசை விருந்து அளித்து மகிழ்வித்த நாதசுர சக்கரவர்த்தி டி. என். இராஜரத்தினம் அவர்கள், ஆகிய அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றியை அறிவித்துக்கொள்ளுகிறேன்.

அன்பன்,

சென்னை-18
26—1—’56

எஸ். எஸ். பி. லிங்கம்
(வேதாசலம்)

நாதசுர சக்கரவர்த்தி

டி.என். இராஜரத்னம்

(பிள்ளை)

சென்னையில் இருக்கின்ருர்

கச்சேரிகளுக்கு எழுதுபவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும் :—

என் 3 2-வது கிரசண்ட் பார்க் தெரு, காந்தி நகர், சென்னை-20.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29—1—1956 ஞாயிறன்று காலை 10 மணிக்கு

சிதம்பரம் மாலைகட்டித் தெரு, சாதுகூடக் கட்டிடத்தில் நடைபெறும்

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் முக்கியப் பொருள்கள் :

(1) மாநில மாநாடு

(2) கழகச் சட்ட திட்டம் திருத்தம் செய்தல்

(3) கொள்கை விளக்க நூல் வெளியிடுதல்

(4) மாநிலப் புது அமைப்புப் பற்றி முடிவெடுத்தல்

குறிப்பு : பார்வையாளர்களாக எவரும் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்

—தி. மு. க. தலைமை நிலையம்

திரு - கொச்சி சட்டசபை உறுப்பினர் போக்கு

தமிழ் வட்டங்கள் கோரி பதவி விலகலாம்!

கொல்லம், ஜன. 26—

அமையப்போகும் புதிய கேரள மாநிலத்தில் தென் திருவாங்கூரில் உள்ள தமிழ் தாலுகாக்களையும், கூடலூரையும் சேர்க்காததை ஆட்சேபித்து திரு-கொச்சி சட்டசபையிலிருந்து 5 உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை நேற்று ‘இராஜிநாமா’ச் செய்தனர் என்று கூறப்படுகிறது

மேலும் இருவர் விலகிவிடத் தயாரென அறிவித்திருக்கிருர்களாம்.

சின்னுபின்னமாக்கப்பட்ட கேரளத்திற்குப் பதில், கேரளம்— சென்னை—கர்நாடகம் இணைந்த ‘தட்சிணப் பிரதேச’ மாநிலத்தை வரவேற்பதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாம்.

நியாயமும்-நேர்மையும்...

(8-ம் பக்கம் பார்க்க)

மொழியை முக்கியமாகக் கவனிக்கவில்லை; கவனித்திருந்தால் பீர்மேடு, தேவிகுளம பற்றிய முடிவும் வேறுவிதமாக இருந்திருக்கும். இந்தப் பகுதிகளில் 100-க்கு 73 பேர் தமிழ் பேசும் மக்கள் இருந்தும் திருவாங்கூர், கொச்சியுடன் இணைத்துவிட முடிவு செய்துவிட்டார்கள்.

“மொழிவாரி இராஜ்யப் பிரிவினைதான் காங்கிரசின் அறிவிக்கப்பட்டக் கொள்கை. கொள்கையில் இப்படி; ஆனல் செயலில் மொழியைப் பற்றிக் கவனியாமல் பிரிவினை நடக்கிறது! இவ்வளவு முரண்பாடுகள் இருப்பதால் ‘இராஜ்யப் புனரமைப்பு’ இப்போது, ‘இராஜ்ய சச்சரவு’ ஆக மாறிவிட்டது.”

மராட்டியம் - ஆந்திரம்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

“கர்நாடகத்தைத் தங்களுடன் இணைத்துக்கொள்ள சென்னையும் —கேரளமும் ‘தாஜா’ செய்கின்றன” என்று கூறினுராம்.

இது இப்படி அமைந்துவிடுமானல, ஆந்திரம் மராட்டியத்துடன் இணையலாம்; கோதாவரி, கிருஷ்ணு நதிகள் மராட்டியத்தில் தான் உதயமாகின்றன; இரு பகுதிகளையும் இவை இணைக்கின்றன; தவிரவும், ஆந்திர—மராட்டிய மக்களிடையே பொதுவான அம்சங்கள் பல உண்டு என்றும் கோபாலர் கூறினுராம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.